රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Provincial Councils and Local Government

පළාත් සභා සහ පළාත් පාලන අංශය
330, යූනියන් පෙදෙස, කොළඹ 02.

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவு
330, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.

Provincial Councils and Local Government Division
330, Union Place, Colombo 02.

දුරකථන / தொலைபேசி / Telephone: 011-2305326
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2329725
ඊ-මේල් / மின்னஞ்சல் / Email: secretary@pclg.gov.lk
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: https://mpclg.gov.lk/

| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No | PL/8/4/2-Data Analytic Cell (Vol III) | ඔබේ අංකය / உமது இல / Your No | |
| දිනය / திகதி / Date | 2025.11. | | |

பிரதம செயலாளர்,
மேல் / தென் / வடக்கு / கிழக்கு / ஊவா / வடமத்திய / சப்பிரகமுவ மாகாண சபை

**உள்ளூராட்சி நிறுவனங்களின் முகாமைத்துவ தரவுத் தளத்தை (LoGo MIS) முறையாகப் பேணிவருவதற்கான வழிகாட்டல்.**

## 1. அறிமுகம்.

இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்கள், பிரதேச மட்டத்தில் பொதுமக்களுக்கான சேவைகளை வழங்கிவரும் மையத் துறையாக காணப்படுகின்றன. உள்ளூராட்சித் துறைக்கு ஏற்புடைய அபிவிருத்தி நடவடிக்கைகளில் முடிவெடுக்கும் போது வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் உள்ளூராட்சி நிறுவன முகாமைத்துவ தகவல் அமைப்பு (Local Government Management Information System – LoGoMIS) (LoGoMIS) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டுநெறிகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகங்கள், உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகங்கள், மாகாண அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு உள்ளிட்ட அனைத்து பங்குதாரர்களின் பொறுப்புகளையும் கோடிட்டுக் காட்டுகின்றன, அவ்வாறே, தரவு அமைப்பில் சரியான இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் முழுமையான தரவுகள் உள்ளிடப்பட வேண்டுமென உத்தேசிக்கப்படுகின்றது. LoGoMIS அமைப்பை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதன் மூலம் அது அரசாங்கத்தின் அனைத்து உள்ளூராட்சி, துணை-தேசிய மற்றும் தேசிய மட்டங்களிலும் மூலோபாய திட்டமிடல் மற்றும் சான்றுகள் சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கு உதவக்கூடிய மையப்படுத்தப்பட்ட மற்றும் நடப்பு தரவு தளத்தை உருவாக்க முடியும்.

## 2. நோக்கம்

உள்ளூராட்சித் துறையில் சான்றுகள் அடிப்படையில் கொள்கை ரீதியான முடிவுகளை எடுப்பதற்காக உருவாக்கப்பட்ட LoGoMIS தகவல் முகாமைத்துவ தரவு அமைப்புடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ள தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் உள்ளூராட்சி மட்டங்களில் உள்ள ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் கடமைப்பொறுப்பு மற்றும் பங்களிப்புகள் பற்றிய புரிதலையும் வழிகாட்டலையும் வழங்குவதன் மூலம் சரியான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல் முகாமைத்துவ அமைப்பாக LoGoMIS ஐ பராமரிப்பதற்கும் 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதிச் சட்டத்தின் பகுதி XIII இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி உள்ளூராட்சி நிறுவனங்களின் வரவுசெலவுத்திட்டத் தரவுகளை இந்த அமைச்சுக்குப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமான வகையில் இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் பேணிவருவதற்குத் தேவையான வழிகாட்டலை வழங்குவது இந்த வழிகாட்டு நெறியின் நோக்கமாகும்.

## 3. உரிய நேரத்தில் சரியான தகவல்களை உள்ளிட வேண்டியதன் முக்கியத்துவம்

தரவுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கும் போது உரிய நேரத்தில் சரியான தரவுகளை உள்ளிட வேண்டியது மிகவும் முக்கியம். அதற்கமைய தீர்மானமெடுக்கும் செயன்முறையை வலுப்படுத்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தல் மற்றும் வளங்களை திறம்பட ஒதுக்கீடு செய்தல் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களில் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

- தீர்மானம் எடுப்பதற்கான தற்காலத் தரவுகள்:
    - உரிய நேரத்தில் தரவுகளை உள்ளிடுவதன் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களின் திட்டங்களைத் தயாரித்தல், வரவுசெலவுத்திட்டம் மற்றும் ஏனைய முக்கியமான நிர்வாக செயற்பாடுகளுக்கு இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை உள்ளூராட்சி நிறுவனங்கள் கொண்டிருப்பதை உறுதிசெய்தல்.
- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்:
    - சரியான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தரவு அமைப்பு காணப்படுவது உள்ளூராட்சி நிர்வாகத்தில் உயர் மட்ட வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலைப் பேணுவதற்கு வாய்ப்பளிக்கின்றது.
- வினைத்திறனுடன் வளங்களை ஒதுக்குதல்:
    - சரியான தரவுகளைப் பேணுவதன் மூலம் வளங்களை ஒதுக்குவதற்கும் சமூகத்தின் தேவைகளை வினைத்திறனுடன் பூர்த்தி செய்வதற்கான சிறந்த முடிவுகளை எடுப்பதற்கும் உதவுகின்றது.

## 4. பிரதான தரப்பினரின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள்

அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்கள் மட்டத்திலும் மாகாண சபைகள் மட்டத்திலும், பின்வரும் நிறுவனங்கள் மூலம் இந்த வழிகாட்டு நெறிகளைப் பின்பற்றி LoGoMIS தரவுத்தள அமைப்பை முறையாகப் பேணுவதற்கும் அந்த தரவுகளின் பகுப்பாய்வு மூலம் எதிர்கால அபிவிருத்தி முடிவுகளை எடுப்பதற்கும் இந்த தரவுத்தள அமைப்பின் மேலதிக அபிவிருத்திக்கான முன்மொழிவுகளை இந்த அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான தரப்பினரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான பயனர் கையேடு "இணைப்பு 1" ஆக இணைக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சின் www.pclg.gov.lk இணையத்தளத்தில் பிரவேசித்து அதனைப் பதிவிறக்கம் செய்ய முடியும். அதற்கமைய, பின்வரும் ஒவ்வொரு நிறுவன மட்டத்திலும் ஏற்புடைய வழிகாட்டல்களைப் பின்பற்றுவது அவசியமாகும்.

### 4.1 உள்ளூராட்சி நிறுவனங்கள்

i. நிர்வாக மற்றும் நிதி அம்சங்களை உள்ளடக்கிய நிறுவனத்திற்குள் தரவு சேகரிப்பு மற்றும் பதவிடும் செயன்முறைக்கு பொருத்தமான இரண்டு உத்தியோகத்தர்களை அடையாளம் கண்டு, ஏற்புடைய பொறுப்புகளை வழங்குவது உள்ளூராட்சி நிறுவனத்தின் செயலாளர்/ஆணையாளரின் பொறுப்பாகும். அடையாளம் காணப்பட்ட உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும் போது, இடமாற்றம் பெறும்போது அல்லது நீண்ட கால லீவில் இருக்கும் போது, இந்தப் பணியை மேற்கொள்வதற்கான பொறுப்புக்கள் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்படல் வேண்டும்.

ii. உள்ளூராட்சி நிறுவனத்தின் பொது/சாதாரண, ஊழியர்கள், வாகனங்கள், கிராம அலுவலர் பிரிவுகள், வட்டாரங்கள் மற்றும் ஆண்டு வரவு செலவுத் திட்டம் தொடர்பான தகவல்களை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் கணினியில் உள்ளிட்டு பொருத்தமான இற்றைப்படுத்தல்களை செய்தல் வேண்டும். மாதாந்த உண்மையான

வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான தகவல்களை ஏற்புடைய மாதத்தைத் தொடர்ந்து வரும் மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் கணினியில் உள்ளிடல் வேண்டும்.

iii. தவறான தரவுகள் ஒட்டுமொத்த முடிவெடுக்கும் செயல்முறையையும் மோசமாக பாதிக்கும் என்பதால், உள்ளிடப்பட்ட தரவின் துல்லியம் மற்றும் முழுமைத்தன்மை தொடர்பில் உள்ளூராட்சி நிறுவனத்தின் செயலாளர் / ஆணையாளர் ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஏற்புடைய பயனர் பெயர் (User Name) மற்றும் கடவுச்சொல்லைப் (Pass Word) பயன்படுத்தி LoGoMIS இல் உள்நுழைந்து சரிபார்த்தல் வேண்டும்.

iv. LoGoMIS அமைப்பில் புதிய இற்றைப்படுத்தல்கள் அல்லது செயற்பாடுகளைப் புரிந்துகொள்வதற்கு திறன் அபிவிருத்திக் கருத்திட்டங்களில் பங்கேற்றல் வேண்டும்.

v. LoGoMIS அமைப்பை மேம்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளில் பங்கேற்றல் வேண்டும்.

vi. LoGoMIS அமைப்பில் உள்ள தரவைப் பயன்படுத்தி உள்ளூராட்சி நிறுவனங்களுக்குத் தேவையான செயலாற்றுகை அறிக்கைகள், நிதி அறிக்கைகள், இணக்க அறிக்கைகள், வளப் பயன்பாட்டு அறிக்கைகள், எதிர்கால திட்டமிடல் மற்றும் மேலதிக ஆய்வுகளுக்கு ஏற்புடைய அறிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை ஊழியர்களுக்கு வழங்கி சிறப்பாக கண்காணித்தல் வேண்டும்.

vii. இந்த அமைச்சின் செலவின பகுப்பாய்வுப் பிரிவால் தயாரிக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் அரையாண்டு மற்றும் வருடாந்த நிதி செயலாற்றுகை அறிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான தரவுகளை வழங்குவதற்கு இந்தத் தரவு அமைப்பு பயன்படுத்தப்படல் வேண்டும்.

#### 4.1.1. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் (ACLG)

i. LoGoMIS அமைப்பு தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களின் பொறுப்பான உத்தியோகத்தர்களை ஒருங்கிணைத்து, அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்க ACLG அலுவலகத்தில் இரண்டு பொருத்தமான உத்தியோகத்தர்களுக்குப் பொறுப்புக்களை வழங்குதல்.

ii. உள்ளூராட்சி நிறுவனங்கள் மாதாந்த அடிப்படையில் உரிய நேரத்தில் மற்றும் துல்லியமான தரவு உள்ளீட்டின் முன்னேற்றத்தை தொடர்ந்தும் கண்காணித்தல் வேண்டும்.

iii. தரவு உள்ளீட்டில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கும், சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்ச்சியான ஒருங்கிணைப்பு பேணப்படுதல் வேண்டும்.

iv. தரவுகளை உள்ளிடும் போது உள்ளூராட்சி நிறுவன மட்டத்திற்குத் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கள் வழங்கப்படல் வேண்டும்.

v. தங்களுக்கு வழங்கப்பட்ட பயனர்பெயர் (User Name) மற்றும் கடவுச்சொல்லைப் (Pass Word) பயன்படுத்தி LoGoMIS இல் உள்நுழைந்து, உள்ளூராட்சி நிறுவனங்களால் கணினியில் உள்ளிடப்பட்டுள்ள தரவுகள் ஒவ்வொரு மாதமும் 20 ஆம் திகதிக்கு முன்பு துல்லியமானதாகவும் இற்றைப்படுத்தப்பட்ட நிலையிலும் உள்ளதா என்பதைச் சரிபார்த்தல் வேண்டும்.

vi. திறன் அபிவிருத்தித் திட்டங்களில் பங்கேற்பதன் மூலம், LoGoMIS அமைப்பில் உள்ள புதிய இற்றைப்படுத்தல்கள் அல்லது செயல்பாடுகளை ஆராய்தல் வேண்டும், மேலும் அந்த அறிவை ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

vii. உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்த மாவட்ட அளவிலான கூட்டங்களில் LoGoMIS ஐக் கண்காணிப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்வது சிறந்தது.

viii. செயலாற்றுகை அறிக்கைகள், நிதி அறிக்கைகள், இணக்க அறிக்கைகள், வளப் பயன்பாட்டு அறிக்கைகள் போன்ற உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்குத் தேவையான பல்வேறு அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும், எதிர்கால திட்டமிடல் மற்றும் மேலதிக ஆய்வுகளுக்குரிய ஏற்புடைய அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் LoGoMIS பயன்படுத்தப்படல் வேண்டும்.

ix. மாவட்டத்துடன் தொடர்புடைய அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்கள் மட்டத்திலும், ACLG அலுவலகத்திலும் LoGoMIS அமைப்புக்குப் பொறுப்பானஉத்தியோகத்தர்களின் தொடர்புத் தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் பேணிவரப்படுதல் வேண்டும்.

### 4.1.2. உள்ளூராட்சி ஆணையாளர் (CLG) அலுவலகம்.

i. உள்ளூராட்சி நிறுவனங்களின் LoGoMIS அமைப்பில் தரவை உள்ளிடுவதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களை ஒருங்கிணைப்பதற்கும், அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதற்கும் CLG அலுவலகத்தின் இரண்டு பொருத்தமான உத்தியோகத்தர்களுக்குப் பொறுப்புக்கள் வழங்கப்படல் வேண்டும். (பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் உட்பட)

ii. உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் செய்யப்படும் தரவு உள்ளீட்டை முறையாகக் கண்காணித்தல் வேண்டும்.

iii. இற்றைப்படுத்தப்பட்ட தரவுகள் உள்ளிடப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் திருப்தியடைதல் வேண்டும்.

iv. LoGoMIS அமைப்பை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களின் ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு வழங்கப்படல் வேண்டும்.

v. LoGoMIS அமைப்பில் புதிய இற்றைப்படுத்தல்கள் அல்லது செயற்பாடுகள் குறித்து அவ்வப்போது நடைபெறும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றல் வேண்டும்.

vi. உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் நடைபெறும் கூட்டங்களில் LoGoMIS அமைப்பைக் கண்காணிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்வது சிறந்தது.

vii. LoGoMIS மூலம் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்குத் தேவையான செயலாற்றுக்கை அறிக்கைகள், நிதி அறிக்கைகள், இணக்க அறிக்கைகள், வளப் பயன்பாட்டு அறிக்கைகள், எதிர்கால திட்டமிடல் மற்றும் மேலதிக ஆய்வுகளுக்கு ஏற்புடைய தரவுகள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

viii. LoGoMIS அமைப்பை அணுகி, உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் தரவு அமைப்பில் உள்ளிடப்பட்டுள்ள தரவுகள் ஒவ்வொரு மாதமும் 25 ஆம் திகதிக்கு முன்னர் சரியானதா என்பதை சரிபார்த்தல் வேண்டும்.

ix. மாகாணத்துடன் தொடர்புடைய அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்கள் மட்டத்திலும், ACLG அலுவலக மட்டத்திலும், CLG அலுவலக மட்டத்திலும் LoGoMI அமைப்புக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் தொடர்பு விவரங்கள் இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் பராமரிக்கப்படல் வேண்டும்.

### 4.1.3. பிரதம செயலாளர், ஏற்புடைய மாகாண அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதி பிரதம செயலாளர்

i. உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சித் திணைக்களங்கள் மூலம் தரவு உள்ளீடு மற்றும் முகாமைக்காக மேற்படி வழிகாட்டல்கள் பின்பற்றி நடவடிக்கைகள்

எடுக்கப்படுகின்றதா என்பது குறித்து மாகாண மட்டத்தில் LoGoMIS செயற்படுத்தலை மேற்பார்வை செய்தல்.

ii. தரவு சேகரிப்பு, தரவுகளை அமைப்பில் உள்ளிடுதல் மற்றும் சரிபார்ப்பு முறையாக மேற்கொள்ளப்படுகின்றதா என்பது தொடர்பில் மேற்பார்வை செய்தல்.

iii. உள்ளூராட்சி நிறுவனங்களால் உள்ளிடப்பட்ட தரவுகளின் துல்லியம் மற்றும் பயன்பாடு குறித்து மாகாண மட்டத்திலான கூட்டங்களில் கவனத்தை ஈர்த்தல்.

iv. LoGoMIS அமைப்பிலிருந்து பொருத்தமான அறிக்கைகளை உருவாக்கி மூலோபாய திட்டமிடல் மற்றும் மேலதிக ஆய்வுகளுக்கு அந்தத் தரவுகளைப் பயன்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களை ஊக்குவித்தல்.

v. மாகாண மற்றும் உள்ளூராட்சி நிறுவன மட்டங்களில் ஊழியர்களுக்கான தரவு உள்ளீடு, தரவுப் பகுப்பாய்வு மற்றும் முடிவெடுக்கும் செயன்முறைகள் உள்ளிட்ட LoGoMIS செயற்பாடுகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

vi. பிரதேச மட்டத்தில் சேவை வழங்கல் மற்றும் நிர்வாக வினைத்திறனைப் பராமரித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் LoGoMIS அமைப்பின் மூலம் வழங்கப்படும் பங்களிப்பை மதிப்பீடு செய்தல்.

vii. LoGoMIS தரவு அமைப்பின் செயற்பாடுகள் குறித்த கருத்துக்களை வழங்கி மேம்படுத்தல்கள் மற்றும் மாற்றங்களுக்கான பரிந்துரைகளை அமைச்சுக்கு சமர்ப்பித்தல்.

**4.2. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.**

i. LoGoMIS தொடர்பான கொள்கை மற்றும் மூலோபாய கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகள் மட்டத்தில் அரசாங்கத்துறையின் வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக அமைச்சினால் பங்களிப்புச் செய்யப்படுகின்றது.

ii. LoGoMIS அமைப்பில் தரவு மற்றும் தகவல் தேவைப்படும் பிரதேச துணை-தேசிய மற்றும் தேசிய அளவிலான பங்குதாரர்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பை பேணுதல்.

iii. LoGoMIS தரவு அமைப்பை சிறந்த முறையில் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

iv. உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண மட்டத்திலான உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமைச்சு ஏற்பாடு செய்து ஒருங்கிணைக்கின்றது. இதில் தரவு உள்ளீடு, தரவுப் பகுப்பாய்வு மற்றும் அறிக்கை தயாரித்தல் குறித்த பயிற்சிப் பட்டறைகள் உள்ளடங்கும்.

v. LoGoMIS அமைப்பு முறையாக செயற்படுத்தப்படுவது குறித்து உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகளுடன் இணைந்து அமைச்சினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது.

vi. LoGoMIS மென்பொருளின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது.

LoGoMIS அமைப்பின் வெற்றி அனைத்து பங்குதாரர்களின் தீவிர பங்கேற்பு மற்றும் ஒருங்கிணைப்பைப் பொறுத்து அமைந்திருக்கும். இந்த வழிகாட்டல்களுடன் இணங்கி தரவுகள் தொடர்ந்தும் சரியாகவும், இற்றைப்படுத்தப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்துவதுடன் அதனூடாக பயனுள்ள நிர்வாகம், மேம்படுத்தப்பட்ட சேவை வழங்கல் மற்றும் உகந்த வள ஒதுக்கீடு என்பன செயலாக்காம் செய்யப்படுகின்றன. இலங்கை முழுவதும் உள்ளூராட்சி நிர்வாகத்தை வலுப்படுத்தி வினைத்திறனுள்ள மற்றும் பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு உள்ளூராட்சி, மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசு ஆகிய மூன்று மட்டங்களுக்கும் LoGoMIS ஒரு அத்தியாவசிய கருவியாக அமையும். அதற்கமைய, சமூக அபிவிருத்தி மற்றும் அரசாங்க சேவை சிறப்பிற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையில் LoGoMIS அமைப்பில் செல்லுபடியாகும் மற்றும் துல்லியமான தரவுகள் கிடைப்பதை உறுதிசெய்வதற்குத் தேவையான முயற்சிகளை எடுக்குமாறு தங்களிடம் தயவன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

மேலும், இந்த வழிகாட்டு நெறிகள் குறித்து கௌரவ ஆளுநர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்கள், உள்ளூராட்சி ஆணையாளர்கள் மற்றும் உதவி உள்ளூராட்சி ஆணையாளர்கள் மற்றும் மாகாணத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தயவுடன் வேண்டிக்கொள்கின்றேன்.

LoGoMIS அமைப்பு இந்த அமைச்சின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவின் திட்டமிடல் பிரிவால் நிர்வகிக்கப்படுவதால், மேலும் தேவையான தகவல்கள், கருத்துகள் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு planning.div@pclg.gov.lk மற்றும் 0112302746/0112302536 தொலைப்பேசி எண்களூடாக தொடர்புகொள்ளுமாறும் வேண்டிக்கொள்கின்றேன்.

எஸ். ஆலோக்க பண்டார
செயலாளர்
அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பிரதிகள் :

1. செயலாளர், நிதி ஆணைக்குழு - தகவலுக்காக
2. செயலாளர், பிரதான அமைச்சு / உள்ளூராட்சி விடய அமைச்சு - சகல மாகாண சபைகள் - தகவலுக்காக
3. மேலதிக செயலாளர் / பிரதம நிதி அதிகாரி, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவு - தகவலுக்காக
4. பிரதி பிரதம செயலாளர், அனைத்து மாகாண சபைகள் - தகவலுக்காக
5. உள்ளூராட்சி ஆணையாளர், அனைத்து மாகாண சபைகள் - தகவலுக்காக
6. உதவி உள்ளூராட்சி ஆணையாளர், அனைத்து மாகாண சபைகள் - தகவலுக்காக
7. செயலாளர் / நகர ஆணையாளர், அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்கள் - தகவலுக்காக

A.H.M. Yaseen
Government Translator (Class I)
Department of Immigration and Emigration
"Suhurupaya",
Battaramulla.